பேளுக்குறிச்சி அருகே உள்ள | ரம் செய்ய முயன்றதாக கூறப் | யும், 2 மகள்களும் உள்ளனர்.




ராசிபுரம்

## முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் முப்பெரும் விழா

ராசிபுரம், பிப்.14–

ராசிபுரம் முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியின் 34–ம் ஆண்டு விழா, விளையாட்டு விழா, விடுதி விழா என முப்பெரும் விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. முதுநிலை விரிவுரையாளர் குணவதி வரவேற்றார். முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளை பொருளாளர் பிரேம்குமார் தலைமை தாங்கினார். கல்லூரியின் முதல்வர் விஜயகுமார் ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் ஆர்.ராமசாமி, சக்தி ஆட்டோ காம்போனென்ட் நிறுவனத்தின் டெக்னிக்கல் பிரிவின் துணைத் தலைவர் சக்கரையப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

விழாவில் கடந்த ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதம் நடந்த வாரியத்தேர்வில் 700–க்கு 700 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் சாதனை படைத்த 9 மாணவ, மாணவிகளுக்கு தங்க நாணயங்கள் மற்றும் சிறப்பு பரிசுகளை சிறப்பு விருந்தினர்கள் வழங்கினார்கள். அதேபோல் சிறப்பிடம் பிடித்த அனைத்து துறை மாணவ, மாணவிகளுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள், ஆசிரியைகளுக்கும் கல்லூரியின் தாளாளர், சிறப்பு விருந்தினர், பொருளாளர் ஆகியோர் 41 கிராம் தங்க நாணயங்களையும், பரிசுகளையும் வழங்கி பாராட்டினார்கள். மேலும் மாநில மற்றும் சேலம் மண்டல பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று முதல் மற்றும் 2–ம் இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளை முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையின் பொருளாளர் பாராட்டி, பரிசு வழங்கினார். விழாவில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. இதில் முக்கிய பிரமுகர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் முதலாம் ஆண்டு துறைத் தலைவர் சந்திரசேகர் நன்றி கூறினார்.

பரமத்தி வேலூரில்

கதிகமாக மது குடிக்க